[1994 நவம்பர் 7

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 34, திரு. ஆர்.பி. பரமசிவம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

34—

சென்னையில் உயிரியல் நூலகம் ஏற்படுத்துதல்.

*16396–**திரு. ஆர். பி. பரமசிவம் :**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பறவைகள், வீட்டுப் பிராணிகள் பற்றிய அறிவினை வளர்த்துக்கொள்ள அவற்றை இளஞ்சிறார்களுக்கு குறைந்த வாடகையில் வழங்கும் நோக்கத்தோடு கல்கத்தாவில் உள்ளதுபோல், சென்னையில் உயிரியல் நூலகம் (Zoological Library) ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பறவைகள், வீட்டுப் பிராணிகள் பற்றிய அறிவை வளர்த்துக்கொள்ள அவற்றை இளஞ்சிறார்களுக்கு குறைந்த வாடகையில் வழங்கும் நோக்கத்தோடு கல்கத்தாவில் உள்ளதுபோல், சென்னையில் உயிரியல் நூலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

முற்பகல் 10–50

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறார்களின் வளர்ச்சியில், அதுவும் உடல் நலத்துடன் கூடிய அதிக வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்திவரும் நமது இதய தெய்வம் ஆட்சியில், எதையும், ஏன் வானத்தில் உலா வரும் நிலவையே கையில் பிடித்துப் பார்க்க நினைக்கின்ற சின்னஞ் சிறு உள்ளம் கொண்ட சிறார்களுக்கு இதுபோன்ற பறவைகள், வீட்டுப் பிராணிகளை நேரடியாக, அதுவும் தங்கள் தாய் தந்தை மூலமாகப் பார்த்துப் பழகும் தன்மையில், "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" என்ற நிலையைப் போக்கிட உயிரியல் நூலகம், சுவாலஜிக்கல் லைப்ரரி அவசியம்

1994 நவம்பர் 7]

என்பதை உணர்ந்து இதை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி மிக முக்கியமான கேள்வி ; பரிசீலனைக்குரியது. இதுகுறித்து வனத் துறை தீவிரமாக ஆராயும். இதுகுறித்து ஒரு திட்டம் தயாரிப்பதற்குரிய ஏற்பாடுகள் நடத்தப்படும். ஆகவே, நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய மேலான கவனத்திற்கும், பரிசீலனைக்கும் இது எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 35, திரு. சோ. இராசாராமன், இருக்கையில் இல்லை.

வினா எண் 36, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

36—

திருத்தங்கலில் கூடுதலாகத் தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல்

21058–* திரு. ஜெ. **பாலகங்காதரன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தங்கலில் கூடுதலாக இரண்டு தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் தொடங்கப்படும் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவுக்கு இடமில்லை.